ஊடக அறிவித்தல் இலக்கம் - 10

# தேர்தல் ஆணைக்குழு

## ஊடக அறிவித்தல்

2022 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பை தயாரிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2021 தேருநர் (வாக்காளர்) இடாப்பை இற்றைப்படுத்தும் பணிகள் மாத்திரம் இம்முறை மேற்கொள்ளப்படுவதனால் கிராம அலுவலர்களால் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது. 2022 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பில் புதிதாக பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்கள் தொடர்பான விபரங்களை பிரதான குடியிருப்பாளர் கிராம அலுவலர்களிடம் கையளித்தல் வேண்டும்.

2004.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த அனைத்து இலங்கைப் பிரஜைகளும் இம்முறை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதனால் அவ்வாறான நபர்கள் பற்றிய விபரங்களை கிராம அலுவலர்களுக்குப் பெற்றுக்கொடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் பொது மக்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு முதல் 18 வயதைப் பூர்த்தி செய்யும் அனைத்து நபர்களையும் 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு வாக்காளர் இடாப்பில் உட்சேர்ப்பதனூடாக பிரதான தேருநர் (வாக்காளர்) இடாப்பில் அவர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்படுவார்கள்.

16 - 18 வயதுக்கிடைப்பட்ட இலங்கைப் பிரஜைகள் பற்றிய விபரங்களை (2006.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள்) கிராம அலுவலர்களுக்கு அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனூடாக எதிர்வரும் காலத்தில் வெளியிடப்படவிருக்கும் குறைநிரப்பு தேருநர் (வாக்காளர்) இடாப்புக்களில் உட்சேர்த்துக்கொள்ள முடியுமெனவும் வலியுறுத்தப்படுகின்றது.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை,
ராஜகிரிய.
2022.05.05